# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2192/45 - 2020 සැප්තැම්බර් මස 10 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.09.10

*2192/45 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**கல்முனை மாநகர சபை**

*கல்முனை மாநகர சபை எல்லைக்குள் திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவ சேவை வழங்கலுக்கான வரி திருத்தம் தொடர்பிலான அறிவித்தல்*

*திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவ சேவை வரி தொடர்பிலான 2019.03.08 ஆந் திகதிய 2113/61 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் அட்டவணையானது பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகிறது என இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருகிறேன்.*

| *தொடர் இல.* | *திண்மக் கழிவகற்றல் சேவை பெறுநரின் வகை* | *திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவ சேவை வரி (ரூபா)* |
|---|---|---|
| *01* | *குடியிருப்பு வீடு அல்லது வர்த்தக நிலையம் (கீழே குறிப்பிடப் படும் 03 ஆம் வகை தவிர்ந்தவை)* | *வாரத்திற்கு ரூபா 50.00* |
| *02* | *தொழிற்சாலைகள்* | *நாளொன்றிற்கு ரூபா 20.00* |
| *03* | *சிற்றுண்டிச்சாலைகள், உணவகங்கள், வாழைப்பழ வியாபார நிலையம் மற்றும் மாட்டு இறைச்சி, ஆட்டு இறைச்சி, கோழி இறைச்சி, மீன் போன்ற விற்பனை நிலையங்கள்* | *ஒரு கிலோ கிராமிற்கு (1 Kg) ரூபா 5.00* |
| *04* | *பாவித்த இளநீர் மற்றும் தெம்பிலி குரும்பை (இரு பாதிகளாக வெட்டப்பட்டு கொடுக்கப்படல் வேண்டும்.)* | *ஒன்றிற்கு ரூபா 1.00* |


1A - G 32862 — 20 (2020/09)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேலும், மேற்குறித்த திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவ சேவை வரியினை செலுத்தத் தவறுவோரிடமிருந்து அதனை அறவீடு செய்வதற்காக மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் 247B(4), 267 இன் கீழான ஏற்பாடுகள் ஏற்புடையது என்ற பந்தி சேர்க்கப்படுகிறது என இத்தால் பொதுமக்களுக்கு அறியத்தருகிறேன்.

மேலும், மேற்குறித்த திருத்தமானது 2020.10.01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் எனவும் இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருகிறேன்.

மேலும், மேற்குறித்த அதிவிசேட வர்த்தமானியில் 01 ஆம் பந்தியின் 01 ஆம் வரியில் "1989.01.28" என தவறுதலாகக் குறிப்பிடப்பட்டது "1989.01.20" எனவும், 02 ஆம் வரியில் "541/7" என தவறுதலாகக் குறிப்பிடப்பட்டது "541/17" எனவும், 04 ஆம் வரியில் "2002.07.06 என தவறுதலாகக் குறிப்பிடப்பட்டது "2002.06.07" எனவும், 08 ஆம் வரியில் "2013.07.26" என தவறுதலாகக் குறிப்பிடப்பட்டது "2013.04.26" எனவும் இத்தால் திருத்தம் செய்யப்படுகின்றது எனப் பொது மக்களுக்கு அறியத்தருகிறேன்.

மேலும், மேற்குறித்த திருத்தங்களும் சேர்க்கப்பட்டவைகளும் மேற்குறித்த அதிவிசேட வர்த்தமானியோடு இணைந்த பகுதிகளாகக் கருதப்பட வேண்டுமெனவும் இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருகிறேன்.

சட்டத்தரணி **ஏ. எம். றகீப்**,
மாநகர முதல்வர்,
மாநகர சபை,
கல்முனை.

மாநகர சபை அலுவலகம்,
கல்முனை,
2020, செத்தெம்பர் 08.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.